**செய்தி வெளியீடு எண்: 464** **நாள்: 17.07.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 16.7.2018 அன்று தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரியில் 28 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை, தேர்வுக் கூடம், மருத்துவ பயிற்சி மாணவ மாணவியர்களுக்கான விடுதி உள்ளிட்ட பல்வேறு மருத்துவக் கல்லூரி கட்டடங்களை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், தேனி, மதுரை, நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கடலூர், விருதுநகர் அரியலூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் 10 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டடங்களை திறந்து வைத்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு, உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், நவீன மருத்துவக் கருவிகள் வழங்குதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தோற்றுவித்தல், மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களை நியமித்தல், உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரியில் 28 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 200 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை, தேர்வுக் கூடம், மருத்துவ பயிற்சி மாணவ மாணவியர்களுக்கான விடுதி, உள்ளிட்ட பல்வேறு மருத்துவக் கல்லூரி கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் தலா 1 கோடி ரூபாய் வீதம், மொத்தம்

3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு சேவைகள் மையக் கட்டடங்கள்; மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீவிர மருத்துவ சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்பு பிரிவு கூடுதல் கட்டடம்;

நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் அரசு மருத்துவமனையில் 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 36 படுக்கைகளுடன் கூடிய அறுவை அரங்கம்; கடலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு சேவைகள் மையக் கட்டடம்; விருதுநகர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்ட தொடக்கநிலை இடையீட்டு சேவைகள் மையக் கட்டடம்;

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையில் அரியலூர் மாவட்டம் – குமிழியம், திருநெல்வேலி மாவட்டம் – ரெட்டியார்பட்டி ஆகிய இடங்களில் 2 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்; கடலூர் மாவட்டம் – கங்கை கொண்டான், திருவண்ணாமலை மாவட்டம் – சொரகொளத்தூர் ஆகிய இடங்களில் 1 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 புதிய ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள்;

என மொத்தம் 38 கோடியே 22 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளில் 6 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள சி.டி, ஸ்கேன் கருவிகள்; சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் 4 கோடியே 92 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி; சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருச்சிராப்பள்ளி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனை ஆகிய

மருத்துவமனைகளில் 12 கோடியே 24 லட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள கேத் லேப் கருவிகள் ஆகிய மருத்துவக் கருவிகளின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர், டாக்டர் பி. உமாநாத், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழுமத்தின், குழும இயக்குநர் டாக்டர் டேரஸ் அகமது, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை கூடுதல் செயலாளர் திரு. எஸ். நாகராஜன், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர். எட்வின்ஜோ, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர். கு. குழந்தைசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் நா. ருக்மணி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 17.7.2018**